**செய்தி வெளியீடு எண்: 88/2024** **நாள்: 28.11.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட திட்டத்தில் வழித்தடம் 3 மற்றும் 5-ல் ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் மெட்ரோ இரயில்களை தயாரிப்பதற்கான ஏற்பு கடிதம் BEML நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இரண்டாம் கட்ட திட்டத்தில் வழித்தடம் 3 மற்றும் 5-ல் ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் 3 இரயில் பெட்டிகளை கொண்ட 70 மெட்ரோ இரயில்களை தயாரிப்பதற்கான ஏற்பு கடிதத்தை BEML நிறுவனத்திற்கு ரூ.3,657.53 கோடி மதிப்பில் வழங்கியுள்ளது. இன்று (28.11.2024), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.தி.அர்ச்சுனன், BEML நிறுவனத்தின் இயக்குநர் (இரயில் மற்றும் மெட்ரோ) திரு.ராஜீவ் குமார் குப்தாவிடம் இதற்கான ஏற்பு கடிதத்தை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர்கள் திரு.ஏ.ஆர்.ராஜேந்திரன், (மெட்ரோ இரயில்), திரு.ஆர்.முரளி, (நிதி மற்றும் கணக்குகள்), NKAB நிறுவனத்தின் குழுத்தலைவர் திரு.டோனி புர்செல், BEML நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் திரு.பிரவீன் குமார் மத்பால் (மெட்ரோ வணிகத் தலைவர்), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், NKAB, மற்றும் BEML நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

இந்த ஒப்பந்தத்தில், வடிவமைப்பு, உற்பத்தி, வழங்கல், சோதனை, ஆணையிடுதல், பணியாளர்களுக்கான பயிற்சி, மெட்ரோ இரயில் மற்றும் பணிமனை இயந்திரங்களுக்கு 15 ஆண்டுகள் முழுமையான பராமரிப்பு உள்ளிட்ட ஒட்டுனர் இல்லாத மெட்ரோ இரயில்களை வழங்குதல் போன்றவை உள்ளடங்கும்.

இந்த ஒப்பந்ததின் கீழ், முதல் மெட்ரோ இரயில் 2026-ஆம் ஆண்டில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். அதைத் தொடர்ந்து கடுமையான பாதைகள் மற்றும் ஓட்டுநர் இல்லாத இரயில் இயக்கத்திற்கான சோதனைகள் நடத்தப்படும். அதன்பின் மீதமுள்ள அனைத்து மெட்ரோ இரயில்களும் மார்ச் 2027 முதல் ஏப்ரல் 2029 வரை ஒவ்வொரு கட்டமாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**